சொன்னார்கள். ஆனால் அந்தத்தேர்வு முடிவுகள் வராத நிலையில் பல்வேறு சந்தேகங்களை பல்வேறு தரப்பிலிருந்து ஏற்படுத்தி வந்தார்கள். அதிலே ஒன்றுதான் மேற்குறிப்பிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை என்று கருதுகிறேன், அவர்கள் ஒரு வதந்தியை வெளியே சொல்ல ஆரம்பித்தார்கள். அதாவது விடைத் தாள்களுக்கு தீவைத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். விடைத்தாள்களுக்கு தீ வைத்துவிட்டால் பிறகு ரிசல்ட் வெளியிட முடியாது. ஆகவே அவர்கள் நோட்டீஸ் தந்திருக்கிறார்கள், நாங்கள் ஆதாரம் இருக்கிறது என்று பதில் சொல்லியிருக்கிறோம். நமக்குத் தேவை ஆதாரம்தானே தவிர ஆதாரம் தருவோம் என்ற வார்த்தை அல்ல. இப்போதுள்ள நிலை ஐந்தாவது செமிஸ்டர் பரீட்சைத் தேர்வு முடிவுகள் வந்ததற்குப் பிறகு தான் அதை எழுதுவதா வேண்டாமா என்பதைப் பற்றி மாணவர்கள் முடிவு செய்யவேண்டும். அதற்குப் பின்தான் ஒரு தேர்வு வைப்பதாக பல்கலைக் கழகம் முடிவு செய்திருக்கிறது. ஆகவே ஆரம்பத்தில் இருந்த குழப்ப நிலைமையும் மாணவர்களுக்கு அவர்கள் எண்ணிக் கொண்டிருந்த கஷ்டங்கள் இப்போது இதை அறிவித்திருக்கிற காரணத்தினால் இல்லை என்பதால் அந்தப் பிரச்னை முடிந்து விடுகிறது. அதைத்தான் திரு. துரைமுருகன் அவர்களும் செனட் உறுப்பினர் என்ற முறையில் எடுத்துச் சொன்னார்கள். எனக்கு தரப்பட்டிருக்கிற விளக்கமும் அதுதான் என்ற அடிப்படையில் இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை யென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

5. அறிக்கை அளித்தல்

துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவை விதி 107(1)-ன் கீழ் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு .சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே தவறாக மீட்டர் காட்டும் ஆட்டோ ரிக்ஷாக்களைத் தடைசெய்வது குறித்து பேரவை வினா எண். 694ன் தொடர்பாக 30—3—82 அன்று சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. செ. இராமலிங்கம் அவர்கள் ஆட்டோ ரிக்ஷாவின் தற்போதைய குறைந்த பட்சக் கட்டணம் எவ்வளவு என்று வினா எழுப்பினார். அதற்கு பதில் அளிக்கையில் ஆட்டோ ரிக்ஷாவின் குறைந்த பட்ச கட்டணம் இரண்டு ரூபாய் என்று கருதுகிறேன் என்றும், அது பற்றிப் பார்த்த பிறகு நான் மீண்டும் தெளிவாகத் தர விரும்புகிறேன் என்றும் கூறியிருந்தேன்.

அண்மையில் ஏற்படுத்தப்பட்ட பெட்ரோல் விலை உயர்வின் காரணமாக ஆட்டோ ரிக்ஷாவின் ஒரு கிலோ மீட்டருக்கான கட்டணம் 80 காசிலிருந்து 90 காசுகளாக உயர்த்தப்பட்டது. ஆனால் குறைந்தபட்சக் கட்டணத்தில் மாறுதல் ஏதும் ஏற்படுத்தப் படவில்லை. தற்பொழுது ஆட்டோ ரிக்ஷாவின் குறைந்தபட்சக் கட்டணம் ரூ. 1.70 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிவிப்புகள்.

(அ) மேலவைத் தலைவரிடமிருந்து வரப்பெற்ற செய்தி

பயிர்களுக்கு கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும், நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன் வடிவு, 1982.

நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப் படுத்தலும்) திருத்தம் சட்ட முன்வடிவு, 1982.

பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமன்ற முன்வடிவுகள் திருத்தம் ஏதுவுமின்றி நிறை வேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிட மிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(1) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 65/1981).

(2) தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 66/1981).

(3) மேலும், தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி(இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62 1981) மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை எதுவுமின்றி திருப்பியனுப்பப்பட்ட தாகவும், மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

7 கவன ஈர்ப்புகள்.

(அ) மதுரை 'ஆல்பர்ட் விக்டர் பாலம்'

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் இரா. தாமரைக்கனி என். எஸ். வி. சித்தன், டி. மணி, ப. நெடுமாறன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வருவார்